சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - 2021-2022-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை - மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் நலம்) அவர்களின் அறிவிப்பு - 'தாட்கோ' தொழில்நுட்ப பிரிவை சார்ந்த கோட்டங்களுக்கு மொத்த அளவியல் கருவிகள் (Total Station Instrument) வாங்க ரூ.50,00,000/-க்கு (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு அனுமதி வழங்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.2)துறை**

**அரசாணை (நிலை) எண் :109** **நாள் : 27.12.2021.**
திருவள்ளுவர் ஆண்டு 2052
பிலவ வருடம், மார்கழி
திங்கள் 12 –ஆம் நாள்.
படிக்கப்பட்டது:–

ஆணையர், ஆதிதிராவிடர் நலம் அவர்களின்
ந.க.எண். க4/28897/2021, நாள். 04.10.2021.

*****

ஆணை:

08.09.2021 அன்று நடைபெற்ற 2021-2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் திருத்திய வரவு செலவு கூட்டத்தொடரில் இத்துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின் போது, மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் நலம்) அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்.

**"தாட்கோ செயல்படுத்தும் கட்டுமானப் பணிகளுக்கு உதவிடும் வகையில் கோட்ட செயற்பொறியாளர் அலுவலகங்களுக்கு 10 மொத்த அளவியல் கருவிகள் (Total Station Instruments) ரூ.50.00 இலட்சம் செலவில் வழங்கப்படும்."**

2. பார்வையில் படிக்கப்பட்ட கடிதத்தில், தாட்கோ மூலம் மேற்கொள்ளப்படும் கட்டுமானப் பணிகளுக்கு சிறந்த முறையில் மதிப்பீடுகளை தயார் செய்யவும், பணிகளை துரிதப்படுத்தவும், ஒப்பந்ததாரர்கள் கட்டடப்பணிகளை நேர்த்தியாக செய்துள்ளனரா என்று அறியவும், எல்லைகளை துல்லியமாக வரையறுக்கவும் கட்டடப் பணிகளுக்கான

அளவுகளை துல்லியமாக அளக்கவும், பணிகளின் அளவுகளை சீராக கண்காணிக்கவும், நில அளவை செய்தல் மற்றும் நிலத்தின் மேடு பள்ளங்களை அளவிடுதல், கட்டடத்தின் தூண்களின் அமைவிடம் மற்றும் ஒவ்வொரு தளத்தின் மட்டத்தை உறுதி செய்தல் மற்றும் பல பணிகளை துல்லியமாகவும், குறைவான நேரத்திலும் செய்து முடிப்பதற்கு மொத்த அளவியல் கருவி மிகுந்த பயனுள்ளதாக அமையும் என்றும், தற்போது அதிக வாடகை செலவில் வெளி நிறுவனங்களை அமர்த்தி பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதனால் அரசிற்கு ஏற்படும் செலவினத்தை குறைக்கும் நோக்கத்துடனும் மற்றும் பணிகளை விரைந்து முடிப்பதற்கும் ஏதுவாக இருக்க நவீன முறையிலான மொத்த அளவியல் கருவி கோட்டத்திற்கு ஒன்று வீதம் மொத்தம் 10 கருவிகள் தேவைப்படுகின்றன என்றும், ஆதிதிராவிடர் நல ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. மேலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகள் / பள்ளிகள் அமைந்துள்ள இடங்களில் உள்ள மொத்த இடவிஸ்தீரத்தினை துல்லியமாக அ-பதிவேட்டின்படி (A-Register) ஆய்வு செய்யவும், எல்லை கற்களை பதிவு செய்து அவ்வப்போது ஏற்படும் நில ஆக்கிரமிப்பினை அப்புறப்படுத்தவும், நில விஸ்திரத்தினை பாதுகாத்திட மொத்த அளவியல் கருவி பயனுள்ளதாக அமையும் என்றும், மேற்படி 10 செயற்பொறியாளர் கோட்டங்களுக்கும் மொத்த அளவியல் கருவிகள் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்வதற்காக தொழில்நுட்ப விவரங்களுடன் கூடிய கருத்துரு, தாட்கோ, மேலாண்மை இயக்குநரிடமிருந்து பெறப்பட்டுள்ளது என தெரிவித்து, தாட்கோ தொழில்நுட்ப பிரிவை சார்ந்த 10 கோட்ட செயற்பொறியாளர் அலுவலகங்களுக்கு 10 மொத்த அளவியல் கருவிகள் (Total Station Instrument) வழங்குவதற்கு ரூ.50.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) புதிய கணக்கு தலைப்பினை உருவாக்கி அக்கணக்கு தலைப்பின் கீழ் நிர்வாக அனுமதியும் செலவினம் மேற்கொள்ள நிதி ஒப்பளிப்பும் அளித்து அரசாணை வழங்குமாறும் அரசினைக் கோரியுள்ளார்.

4. மேற்காணும் ஆதிதிராவிடர் நல ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, ஆய்வுக்குப்பின், மாண்புமிகு அமைச்சர் ஆதிதிராவிடர் நலம் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க தாட்கோ செயல்படுத்தும் கட்டுமானப் பணிகளுக்கு உதவிடும் வகையில் ஒரு தாட்கோ கோட்ட செயற்பொறியாளர் அலுவலகத்திற்கு ஒரு கருவி வீதம், 10 மொத்த அளவியல் கருவிகள் (Total Station Instruments) ரூ. 50,00,000/-க்கு (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) வாங்கும் பொருட்டு, ஆணையர், ஆதிதிராவிடர்

நலம் அவர்களுக்கு நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

2225- ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன்-01-ஆதிதிராவிடர் நலன்-283 வீட்டு வசதி - மாநிலச் செலவினங்கள் AB- தாட்கோ கோட்ட செயற்பொறியாளர் அலுவலகங்களுக்கு மொத்த அளவியல் கருவிகள் வாங்குதல்-320- கருவிகளும் தளவாடங்களும் 01-வாங்குதல்.

(IFHRMS-த.தொ.கு2225-010283-AB-320 01)

6. மேற்கண்ட புதிய கணக்குத் தலைப்பிற்கு ஆதிதிராவிடர் நல ஆணையர் அவர்கள் மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார். சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர்/கருவூல கணக்கு அலுவலர் மேற்கண்ட புதிய கணக்குத் தலைப்பினை தங்கள் கணக்குகளில் துவங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. மேலே, பத்தி-4-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புதுப்பணி" குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்டும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு - செலவு, பொது-I) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானிய கோரிக்கையில் இச்செலவினம் கொணர்ந்து சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பெறும் வரையிலான காலத்திற்கு தேவையான நிதியினை சரியாக கணக்கிட்டு 1963 எதிர்பாரா செலவு நிதி விதிகளில் குறிப்பிட்டுள்ள அட்டவணை "A"யினை பூர்த்தி செய்து எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெற இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வரவு-செலவு பொது-I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்தினை 2021-2022-ஆம் நிதி ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் இக்கருத்துருவை நிதி (ஆதி(ம)பந / வ.செ.பொது.I) துறைக்கு அனுப்பிவைக்குமாறு ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை அவர்கள் அறிவுறுத்தப்டுகிறார்.

8. மேலே, பத்தி 4-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள அளவியல் கருவிகள், இணைப்பு-I மற்றும் II-ல் கண்டுள்ள தொழில்நுட்ப விவரக் குறிப்புகளின்

(Technical Specifications) அடிப்படையில் மேலாண்மை இயக்குநர், தாட்கோ மூலம் GeM இணைய முகப்பிலிருந்து கொள்முதல் செய்யப்பட வேண்டும். மேலும், மேலே பத்தி 4-இல் ஒப்பளிப்பு செய்யப்படும் தொகை தாட்கோ நிறுவனத்திற்கு பணமாக வழங்காமல் தாட்கோவின் கீழ்க்காணும் அலுவலர் பெயர் வைப்புத்தொகை கணக்குத் தலைப்பில் வரவு வைக்குமாறு ஆதிதிராவிடர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்

"K வைப்பீடுகள் மற்றும் முன்பணங்கள் (b) வட்டி பெறாத வைப்புத் தொகைகள் - 8443 - 00 - உரிமையியல் வைப்புத் தொகைகள் -800 - இதர வைப்புத் தொகைகள் - BY - தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழக வைப்புத் தொகைகள் (தாட்கோ) - 801 வரவுகள் - 02 வட்டி பெறாதவை - 802-வழங்குதல்-02-வட்டி பெறாதவை.

IFHRMS (த.தொ.கு. 8443 00 800 BY 801 02) (Receipts)

IFHRMS(த.தொ.கு. 8443 00 800 BY 802 02) (Outgo)

9. மேலும், பத்தி 4-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள அளவியல் கருவிகளை கொள்முதல் செய்தபின் பயனீட்டு சான்றினை அரசிற்கு தவறாது அனுப்பி வைக்கும்படி மேலாண்மை இயக்குநர், தாட்கோ கேட்டுக் கொள்ளப்படுகிறார். இக்கருவிகள் தாட்கோ கோட்ட செயற்பொறியாளர்கள் கட்டுப்பாட்டில் இருத்தல் வேண்டும். மேலும், அவர்கள் இக்கருவிகளை நன்முறையில் பராமரித்தல் வேண்டும்.

10. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.கு. எண்.59253/நிதி(ஆதி(ம)பந/2021, நாள்.27.12.2021-இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1289 (ஆயிரத்து இருநூற்று எண்பத்து ஒன்பது)

(ஆளுநரின் ஆணைப்படி)

க. மணிவாசன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்:</u>

ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை – 600 005.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை - 600 005.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-600 018.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை -9/18

சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு) சென்னை - 600 009.

<u>நகல்:</u>

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை -600 009.

மாண்புமிகு அமைச்சர், (ஆதி(ம)பந) அவர்களின் முதுநிலை
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை -600 009.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை
முதன்மை செயலாளரின் தனிச் செயலர், சென்னை - 600 009.

நிதி(ஆதி(ம)பந)/ வ.செ.பொ-I/II/ வ.வ.I துறை, சென்னை -600 009

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (அநமு.1 / ஆதிந1/ ஆதிந.5/ நி.எ.2)
துறை, சென்னை -600 009.

இருப்புக்கோப்பு /உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ரா. தங்கம்
27.12.2021
பிரிவு அலுவலர்.

27.12.2021

**ANNEXURE - I**

**G.O. (MS) NO.109 ADI DRAVIDAR AND TRIBAL WELFARE (ADW2(1)) DEPARTMENT, DATED:27.12.2021**

## DESCRIPTION OF TECHNICAL SPECIFICATIONS

- Internal Memory : > 1 GB
- Fast measurement in quick mode ≤ 2.5 sec with fast saving time.
- Visible Laser Pointer
- Graph of entire survey displayed on screen of total station with zoom & pan facility for collecting data in different layers.
- Topo drawings can be created simultaneously as you measure in layers On-board total station.
- Dual axis compensator
- On board pre-loaded graphical software
- Range under Good conditions
- Single prism : 3.5km
- Can measure distance without reflector upto 500 meter to 90% reflective object (in good condition)
- Angle least count 1"
- Angle Accuracy : 1"(As per DIN18723/ISO17123-3)
- Distance accuracy in reflector less mode : 2~200m: ± (3+2ppmxD)mm
- Battery 8 hrs continuous use.
- Laser plummet in alidade rotating through 360°
- A tubular plate buble on alidade
- Three Electronic bubbles at right angles to each other on display panel.
- Alpha numeric key board with 26 keys in addition to touch screen.
- Contours can be created On-board total station in colour.
- Many other COGO facilities available.
- 1 Nos Prism with 1 Nos target Plate to cover upto 5000 meters distance and one number tribrach and one number range pole.
- 1 Nos Tripod – Wooden stand

க.மணிவாசகன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

ஜா. தங்கம்
27.12.2021
பிரிவு அலுவலர்

27.12.2021

**ANNEXURE - II**

**G.O. (MS) NO.109 ADI DRAVIDAR AND TRIBAL WELFARE (ADW2(1)) DEPARTMENT, DATED: 27.12.2021**

| DESCRIPTION OF TECHNICAL SPECIFICATIONS |
|---|
| ☞ One USB Data Transfer cable<br>☞ One Pen drive (8 GB)<br>☞ With additional Batteries (30 Hrs Usage)<br>☞ One Charger<br>☞ One Tommy pin, One screw driver<br>☞ One Rai cover<br>☞ One CD containing instruction Manual<br>☞ One CE containing Active Sync software<br>☞ One on-board Pentax field Genius data collection<br>☞ Software (Pre-loaded)<br>☞ Dual side display Detachable Tribrach Having following features:<br>☞ Data communication ports: 1 No, min USB, 1No, pen drive slot<br>☞ Display : 3.5 inch TFT colour LCD<br>☞ A daylight readable touch screen with back light illumination<br>☞ Processor speed : 528 MHZ |

**க.மணிவாசகன்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

//உண்மை நகல்//

ஜா. தங்கம்
27.12.2021
பிரிவு அலுவலர்
27.12.2021